மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2023ம் ஆண்டு ஜூன் திங்கள் 03ம் நாள் சனிக்கிழமை

இ.ம.எண்.04/2023
உள்
அசல் வழக்கு எண்.59/2017
-------------

1. ஆர்.கருப்பாயம்மாள்
2. இராமச்சந்திரன் ஆசாரி (இறப்பு)
3. ஆர்.முருகன்
4. ஆர்.வேலம்மாள்
5. எஸ்.மூர்த்தியம்மாள் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. தமிழ்நாடு அரசு
அதன் பிரதிநிதி மாவட்ட ஆட்சியர்
விருதுநகர் மாவட்டம், விருதுநகர்
2. மாவட்ட வருவாய் அலுவலர்
விருதுநகர் மாவட்டம், விருதுநகர்
3. உதவி இயக்குநர்
நில அளவை மற்றும் ஆவணம்
விருதுநகர் மாவட்டம், விருதுநகர்
4. வருவாய் கோட்டாட்சியர்,
சாத்தூர் வருவாய் கோட்டம், சாத்தூர்
5. வட்டாட்சியர்,
வெம்பக்கோட்டை வட்டம்,
வெம்பக்கோட்டை
விருதுநகர் மாவட்டம்
6. ஆணையாளர்/வட்டார வளர்ச்சி அலுவலர்
வெம்பக்கோட்டை
விருதுநகர் மாவட்டம்
7) எஸ்.இராவனேஷ்வரன்
8) ஜி.ஜெயகுருநாதன் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 01.03.2023ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 27.03.2023ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/

வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.அ.அருணாசலம் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 7ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் சி.முத்துக்கண்ணு அவர்கள் ஆஜராகியும், 8ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.பாஸ்கரன் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிர்உரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

<u>**உத்தரவு**</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறை விதிகள் 75 மற்றும் 76-ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், திரு.மு.செய்யது இப்ராகிம்சா தனி வட்டாட்சியர் (தீ.தொ.ஆ) சிவகாசி அவர்களை வழக்கில் வாதி தரப்பில் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வழங்கி உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று 24.02.2023ம் தேதியன்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**2). மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-**</u>

தாவா சொத்து புஞ்சை நிலங்கள் ஆகும். தாவா சொத்தில் விவசாய பணிகளுக்கு செல்லக்கூடிய வண்டிப்பாதை இருப்பதாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி உட்பிரிவு தவறானது என்றும், தாவா சொத்துக்களில் பாதை இல்லை என்றும், அது தாவா சொத்துக்கு மேற்கில் தர்ன உண்மையான வண்டிப்பாதை உள்ளது என்றும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், பட்டாசு தொழிற்சாலைக்கு தொழிற்சாலை உரிமையாளர்கள் தனியாக பாதைக்காக சொத்துக்களை கிரையம் பெற்று த னிப்பாதையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டுமே அன்றி பொது பாதையை பயன்படுத்த உரிமையில்லை. இந்த சூழ்நிலையில் 1வது மனுதாரர், 1வது மற்றும் 2வது எதிர்மனுதாரர்களுக்கு 7வது எதிரம்னுதாரருக்கு விதிகளை மீறி பட்டாசு தொழிற்சாலைக்கு உரிமை வழங்கியிருப்பதாக புகார் செய்ததின் அடிப்படையில், 7ம் எதிர்மனுதாரர் கட்டியுள்ள எம்/எஸ்.இராஜலட்சுமி தொழிற்சாலையை

ஆய்வு செய்து விதிகளின்படி தொழிற்சாலைக்கு பாதை வசதி உள்ளதா என்பதை ஆய்வு செய்யும்படி தீப்பெட்டி தொழிற்சாலை ஆய்வாளர், தனி வட்டாட்சியர் அவர்களுக்கு ந.க.இ4/1299/2018, நாள்-29.01.2018ன்படி உத்தரவு பிறப்பித்துள்ளார். மேற்படி உத்தரவின்படி தனி வட்டாட்சியர் அவர்கள், 06.03.2018ம் தேதியில் ஆய்வு செய்து அறிக்கை கொடுத்துள்ளார். மேற்படி அறிக்கையின் சம்மந்தப்பட்ட வட்டாட்சியரை மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் விசாரணை செய்யும்பட்சத்தில் உண்மை நிலவரம் தெரியவரும். அதனால் மாவட்ட வருவாய் அலுவலர் உத்தரவின் பேரில் தாவா சொத்தையும், எம்/எஸ்.இராஜலட்சுமி பட்டாசு தொழிற்சாலையையும் மற்றும் பட்டாசு ஆலைக்குச் செல்லக்கூடிய பாதையையும் ஆய்வு செய்த தனி வட்டாட்சியர் (தீ.தொ.ஆ) திரு.மு.செய்யது இப்ராகிம்சா என்பவரை வாதி தரப்பு சாட்சியாக Village Map சகிதம் விசாரிக்கும்பட்சத்தில் உண்மை நிலவரம் தெரியவரும். அவ்வாறு இல்லாதபட்சத்தில் வாதிகளுக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டம் ஏற்படக்கூடியதாக உள்ளது என்று மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**<u>3). 5ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 1 முதல் 4 மற்றும் 6, 8ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரை சுருக்கம்:-</u>**

மனுதாரர்கள் தாக்கல் செய்திருக்கும் மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. தாவா மனுவானது பிரிவு 75 மற்றும் 78 சிஆர்பி-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா மனு தாக்கல் செய்வதற்கு முன்பாக எந்த அலுவலகத்தில் இருந்து மனு குறித்த ஆவணங்கள் சாட்சியத்திற்காக வேண்டப்படுகிறதோ, அந்த அலுவலகத்தில் மேற்படி ஆவணங்கள் குறித்து மனு செய்து இருக்க வேண்டும். அந்த மனுவானது நிராகரிக்கப்பட்டு இருக்க வேண்டும். அதுபோன்ற மனுவானது மனுதாரரால் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் சாட்சியம் அளிக்க வேண்டிய சாட்சியானவர் கொண்டு வரவேண்டிய ஆவணங்கள் பட்டியல் இடப்பட வேண்டும். அதுபோல தாவா மனுவில் எந்த விபரமும் இல்லை. அதனால் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவானது தள்ளுபடி செய்ய வேண்டியதாகும். மேலும் மனுதாரர்கள் கோரும் ஆவணமானது

ஏற்கனவே மனுதாரர்கள் தரப்பில் Ex.A25, Ex.A26 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் குறித்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணையும் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் ஏற்கனவே நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணம் குறித்து மீண்டும் சாட்சியம் அளிக்க கோருவது ஏற்றுக்கொள்ளக் கூடியதில்லை. மனுதாரர்கள் வழக்கினை காலதாமதம் செய்ய வேண்டுமென்பதற்காகவே தாவா மனு தாக்கல் செய்துள்ளார்கள். எனவே, மனுதாரர்கள் மனுவினை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று மனு எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

<u>4). 7ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:-</u>

மனுவானது அசல் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்திலேயே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் தனி வட்டாட்சியர் (தீ.தொ.ஆ.) திரு.செய்யது இப்ராகிம்சா.பி.காம்., என்பவரை விசாரிப்பது தேவையற்ற நீதிமன்ற நேரத்தை வீணடிக்கும் செயலாகும். மேற்படி தனி வட்டாட்சியர் அவர்கள் ந.க.இ.4/1229/2018 நாள் 29.01.2018ன்படி உத்தரவு பிறப்பித்துள்ளார் என்பதை வாதி தரப்பு ஆவணமாக வா.சா.ஆ.23 ஆக தாக்கல் செய்துள்ளார்கள். அதேபோல் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் தனி வட்டாட்சியர் அவர்கள் 06.03.2018 என்ற அறிக்கையானது வாதி தரப்பு சான்றாவணமாக வா.சா.ஆ.26 ஆக 25.11.2022ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர்கள் மனுவினை 7ம் எதிர்மனுதாரர் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

5) இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

6) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

7) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

**8) தீர்வு:-**

மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிர்உரையும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரர்களால் திரு.மு.செய்யது இப்ராகிம்சா தனி வட்டாட்சியர் (தீ.தொ.ஆ) சிவகாசி அவர்களை வழக்கில் வாதி தரப்பில் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வழங்கி உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று 24.02.2023ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரர்களால் தங்களது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக் கூடும். தங்களது தரப்பு வழக்கினை நிரூபணம் செய்வதற்கு மனுதாரர்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. ஒரு வழக்கில் சான்றாவணம் என்பது வழக்கை தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிப்பதாகும். மேலும், அதுசம்பந்தமாக உரிய நபர் சாட்சியம் அளிப்பதும் இந்த வழக்கில் சரியான தீர்ப்பினை எட்டுவதற்கு முக்கியமாகும். எனவே மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள் மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு திரு.மு.செய்யது இப்ராகிம்சா தனி வட்டாட்சியர் (தீ.தொ.ஆ) சிவகாசி அவர்களை வழக்கில் வாதி தரப்பில் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வழங்கி உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று 24.02.2023ம் தேதியன்று மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு ஜூன் திங்கள் 03ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:- இல்லை

எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்:- இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.